முருகப்பெருமான் துணை

**மகான் விசுவாமித்திரர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.01.2023, திங்கள்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கனே
தருமனே உலகை காக்கவந்த
அவதாரமே ஞான தேசிகனே
அய்யனே உன்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது கலை திங்கள்
குறைவிலா நவதிகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 09 ம் நாள் 23.01.2023, திங்கள்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசியை
தேசிகனுக்கு விசுவாமித்திரர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சமூகம் படைக்க
தானதரும பலமோடு சன்மார்க்க
தனித்துவம்பட ஞானவழிகாட்டும்
4. வழிகாட்டும் அரங்கமகானை
வணங்கி மக்களெல்லாம் வர
தெளிவுதிடம் கண்டு இனிதே
தேற்றம் மெய்வழியில் கூடும்
5. கூடவே முருகப் பெருமானை
கும்பிட்டு சக்தி பெருகிடவே
ஈடேற்றம் பிறவிப் பயனாக
எல்லா சூட்சுமமும் விளங்கி மாற்றம்
6. மாற்றம் ஞானவான்களாக
மண்ணுலகில் தயவே வடிவான
ஆற்றல் கொண்டவர்களாகவே
அற்புதம்பட மாற்றி உலகினில்
7. உலகினில் அரங்கன் ஆசிபெற்ற
உயர்வான வரம் பெற்றநல்
வேலவன் அனுகூலம் கொண்ட
வெற்றி காணும் ஞானிகள் படைகளாக
8. ஆகவே ஆற்றல் பெருகி
ஆளுமை தனக்கும் வழிகாட்டி
செகத்தை மாற்றும் வண்ணம்
சித்திமிகு ஞானஆட்சி தரும்
9. தரும் சக்திகளாகத் தேறி
தவராஜன் அவதார நோக்க
விருப்பம் வழி அனைத்தும் மாறி
வினவிட உலக மாற்றம்

10. மாற்றம் சடுதி காண்கும்
மனிதர்கள் ஆட்சி முடிவுகண்டு
ஆற்றல் மிக்க ஞானிகள் ஆட்சி
அரங்கனால் அரங்கேறும்

11. ஏறுமுகம் தரும் ஞானசபை
ஏழாம்படை வீடே எனக்கண்டு
ஆறுதல் தேடி உலகோர் வர
அனைத்து மாற்றமும் சடுதி காணும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–